# குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்:

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 5-8-58 செவ்வாய் | இசை: 10


## பட்டாளம் கிளம்பிற்றுக் கொட்டடா பறை!

நான்கு கோடித் தமிழர் பட்டாளம்
நாட்டை மீட்கக் கிளம்பிற்று கண்டாய்
தீங்கு செய்யும் வடவரின் ஆட்டம்
செல்லா தென்று கொட்டுவெற் றிப்பறை!

நாங்கள் அல்ல ஆட்பட் டிருப்பவர்
நாங்கள் நாட்டை ஆளப் பிறந்தவர்
வேங்கை எழுந்தபின் நரிகட் கிங்கே
வேலை இல்லை என்றுநீ கொட்டு!

ஆண்ட வர்க்கு வாய்த்தது தொண்டோ
ஆளுந் தகுதியும் வடவருக் குண்டோ!
தோண்ட வேண்டாம் வடவர்சாக் குழியென்று
சொல்லிக் கொட்டடா கொட்டுவெற் றிப்பறை!

பழைய வரலாறு தெரியாதா தங்கள்
பாட்டன் மாரைக் கேட்டால் சொல்லுவர்
அழையா வீட்டில் நுழைந்த திடக்கே
அழியப் போவது வடக்கே வடக்கே!

# கொடுங்கோல் முறிக்கும் பெரியார் வாழ்க!

### சில கேள்விகட்கு விடை.

பன்னும் முகை-மாப் பாண்டியன் காண்க
பாரதி தாசன் உரைப்ப திஃதே:
மன்னு தமிழே திராவிடம் என்று
திரிந்த தென்ருல் மறுப்பவர் இல்லை.
அன்ன ''திராவிடம்'' என்ற பெயர்தான்
ஆயிரம் ஆண்டுகள் முன்னமே நமது
தென்பால் உள்ள ஐந்துநா டுகளையும்
தெரிவிப்ப தாயிற் றுலகுக் கெல்லாம்.

அதேகா லத்தில் ''தமிழ்நா''டெனில் அவ்
வைந்தில் ஒன்றையே குறித்த தாகும்
இதனைக் கருதியே பெரியார் கண்ட
இயக்கத் திற்குத் ''திராவிடர் கழகம்''
எதிரிக்கும் விளங்க—எனப்பெய ரிட்டார்
எதையும் எதிர்ப்பவர் இதையும் எதிர்த்தார்
எதையும் செய்யார் எதையும் மறுப்பார்.
எதிர்ப்பும் மறுப்பும் நாட்டுத் தொண்டாகா

திராவிட நாடா? திருத்தமிழ் நாடா?
எதைமீட்க எண்ணம்? என்ப தான
ஒருபெருங் கேள்வியைக் கேட்கின் றவர்கள்
ஒருசின்ன உண்மையை மறக்கின் ருர்கள்
திராவிட நாடே தமிழ்நா டன்ரே!
திருத்தமிழ் நாடே திராவிட மன்ரே!
திராவிடம் மீட்பவர் தமிழ்நாடு மீட்பவர்.
தமிழ்நாடு மீட்பவர் திராவிடம் மீட்பார்.

திராவிட நாட்டினை ஒட்டி இருந்த
தெலுங்கு, கன்னடம் கேரளம் போனபின்
திராவிட நாடெனப் பெயர்கூறி இதைப்
பிரிப்போம் என்று செப்புவதா என்பர்.
கராவா விழுங்கிற்றுக் கேரள நாட்டையே?
காக்கையா தூக்கிற்றுத் தெலுங்கு நாட்டை?
இராமல் எங்கே போயிற்றுக் கன்னடம்?
தில்லி இழுப்புநோய்க் குள்ளே உள்ளன!

மீதி யான திராவிட நாட்டை
மேன்மை யான நம்தமிழ் நாட்டை
ஓது மிந்தச் சென்னை அரசை
ஒன்று பட்டு நாம் மீட்கும் ஓர் ஆற்றலைக்
கா்தாற் கேட்கும் கேரளம் முதலன
தில்லியின் காலை விடாதிருந் தாலும்
ஏதும் செய்ய முடியாதா நம்மால்?
இன்றுள ஆற்றல் அன்றைக்கும் இருக்கும்

# சாதி உண்டு

ஒட்டாரம் செய்வதென்ன தங்கச்சி?–நீ
உன்கணவன் வீட்டுக்குப்போ தங்கச்சி.
வட்டாரம் சிரிக்குமடி தங்கச்சி-உனை
வாழாவெட்டி என்றுசொல்லும் தங்கச்சி

கட்டினுன் தாலியடி அக்கச்சி–என்
கைதொட்டதில் குறைச்சலில்லை அக்கச்சி
தட்டினுன் அவன் உறுதி அக்கச்சி-எனைத்
தாழ்ந்தசாதி என்றுசொன்னுன் அக்கச்சி

இழிந்தவேலை செய்திருக்கத் தங்கச்சி–நீ
ஏற்றுக்கொண்டால் வாழமுடியும் தங்கச்சி
ஒழிந்தநேரம் உனைஅழைத்தால் தங்கச்சி-நீ
ஒத்துக்கொண்டால் வாழமுடியும் தங்கச்சி

தழைத்திருந்த தமிழ்நாட்டில் அக்கச்சி-இந்தச்
சாதிஉண்டோ சொல்லேடி அக்கச்சி
வழங்கிவரும் ஆட்சியிலே அக்கச்சி-நான்
வழக்குப்போடப் போகின்றேன் அக்கச்சி

என்னசொல்லி வழக்கிடுவாய் தங்கச்சி?–சாதி
இல்லைஎன்று வழக்கிடுவேன் அக்கச்சி
தன்னரசு போனதடி தங்கச்சி!–நம்
தலையரசும் போனதுண்டோ? அக்கச்சி

என்னதீர்ப்பைக் கோருகின்ருய் தங்கச்சி?-சாதி
இல்லைஎன்ற தீர்ப்புவேண்டும் அக்கச்சி
உன்னரசின் தன்மையைக்கேள் தங்கச்சி,-சாதி
உண்டென்னும் சட்டமுண்டு தங்கச்சி!

---

நாவலந் தீவென நவிலும் படத்தை
நம்சென்னை அரசினை நீக்கி—எரிப்பதால்
கூவுவார் தெலுங்கர் குதிப்பார் கேரளர்
கொடும்பகை கொள்வார் கன்னடர், என்று
நாவும் நோவ நவிலுகின் ருர்சிலர்
நாங்கள் எரிப்பது படத்தையே படத்தையே
தீவில் உள்ள மக்களை அல்ல!
சிறிதும் இதனை மறந்திட வேண்டாம்.

படத்தை எரிப்பினும் கேரளம் முதலன
பகைக்கும் என்ருல் பகைக்கட்டும் நன்ருய்ப்
படம் எரிப்பதன் நோக்கத்தை எண்ணிப்
பார்க்கட்டும்! நாணட்டும்! பகைக்கட்டும் நன்ருய்த்
தடங்கொள் தமிழகத் தாய்க் குதவாத
தக்கைகள் பகைக்கட்டும் திருந்தட்டும் பின்பு!
கொடும்பகைத் தில்லி ஏந்திடுங் கொடுங்
கோலை முறிக்கும் பெரியார் வாழ்கவே!

பா.

புதுச்சேரி, தி. வ. ஆ கக௯அ௯ ஆடி உக

## வாழ்க பாலசுப்பிரமணியனார்!

என்று பெரியார் அறத்துறை இறங்கினார்-
அன்று தொட்டே அவரடிச் சுவட்டை
அகலா மேதொண் டாற்றி வருபவர்;

தமிழ்வாழ்ந் தால்தான் தமிழர் வாழ்வார்
என்று தமிழுக் கென்றும் தொண்டு
நன்று புரியும் நல்லவர், வல்லவர்

ஆரியச் சேற்றில் அழுந்தும் தமிழரை
வாரி அணைத்துநல் வழிப்ப டுத்தும்
வள்ளுவம் எவர்க்கும் அள்ளி வழங்கும்
வள்ளல்; தமிழாய்வு வாய்க்கப் பெற்றவர்;

அவர்தாம் யார்எனில் அறையக் கேண்மின்
திருச்சித் திருமகள் முகத்த அரிசி
ஆலைப் பால சுப்பிர மணியனார்!

"நம்குயில்" நாளை வருமென நவின்றதும்
இன்றே இந்தா நூறுவெண் பொற்காசு
என்றே வாழ்நாட் கட்டணம் ஈந்தவர்

"பாரதி தாசன் பாட்டுப் போட்டி"
பாரினர் பாட்டுப் பயன்பெற எண்ணி
ஏற்பாடு செய்தார் என்றால், பொதிகை
மேற்படு சந்தனம் விரைகெடல் உண்டா?
அயற்கை எதிர்பா ராதவர்
இயற்கை அறப்பண்பு வாழ்களந் நாளுமே!

★

## தலைவற் கீந்தாள்

— ஆ. அழகன் —

### துறை: மருதம்

சிலையை மயிலைச் சிறிதொவ்வாத்
திறங்கண் டின்ப வெள்ளத்தே
நிலையைக் காணா திருந்தொருநாள்
நேரார் கொண்ட போர்கருதி
மலையச் சென்று பகைவென்றே
வந்தோன் கொஞ்சி மகிழ்ந்திட ம
தலையை இடையில் இருந்தெடுத்துத்
தலைவற் கீந்தாள் தாழ்குழலே!

---

### மீண்ட செல்வங்கட்கு

## வரவேற்பும் வாழ்த்தும்

கண்ணீர்த் துளிஎனும் உண்ணிகள் தொல்லை
எண்ணி மீண்ட தோழர்கள் இவர்கள்:
திருப்பத் தூரில் தேநீர் விடுதிக்
கண்ணன், மற்றும் அறிவுக் கண்ணு!
துரைசாமி என்னும் பொன்வேலைத் தோழர்!
நகைக்கடைத் தேவ ராசன் என்பார்
தேநீர் விடுதித் திகழரங்க சாமி
சாப்பாட்டு விடுதிச் சங்கரன் ராசா
முடிதிருத்து முதல்வர் கிருட்டின சாமி
இன்னுணவு விடுதி இராமன் என்பார்
நிலாநகை வாணிகம் கலைவாணி என்பார்
கொண்டவேகாம்பரம் குயில்இதழ் விற்பார்
வெள்ளி வேலை முனிசா மிஅவர்
தையல் வேலைத் தகுமுரு கேசன்
இறைச்சி வாணிகம் எழிலுறு மாசி
இரும்பு வாணிகம் அப்துல் வகாபு
நாளும் பொதுப்பணிக் காளி யப்பன்
வண்டி வண்டியாய் நாட்டு மக்கட்குத்
தொண்டுசெய் ராம சாமித் தூயன்
ஆகியோர் திராவிடர் கழகம் அடைந்தனர்
வருக வருக வாழ்க!
திருநாட் டுக்குத் தொண்டு செய்யவே!

—:○:—

# வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

## அந்தணர்

இதை அந்தம்+அணர் என்று பிரித்து முதலில் உள்ள அந்தம் என்பது வடசொல் என்று கூறி அழிவழக்காடுவர் இழிவுறு பார்ப்பாரும் இனம்கண்டு வேர்ப்பாரும்.

வேதாந்தத்தை அணவுவோர் என்பது அதன் பொருள் என்று பொய்ப்பர் அவரே!

அம்+தண்=என்டன அந்தண் என்றாயிற்று இதன்பொருள்: அழகிய தட்பம், அஃதாவது, நாட்டார்கண்கட்கு அழகுசெய்வாரின் தொண்டின் அருட்டன்மை,

இந்த, அந்தண் என்பது தமிழ்ப் பெருநூற்களில் பெரும்படியாய் வந்து பயில்வது. அந்தண் சோலை, அந்தண் காவிரி என வந்துள்ளவை காண்க.

அந்தணர் என்பவர் யார்? — கூறுவோம்:

அறந்தான் இயற்றும் அவனிலுங்
கோடி அதிகம் இல்லம்
துறந்தான் ...

என்பது பட்டனத்தடிகள் பகர்ந்தது.

இல்லறத்தானைவிட மக்கள் நலம் கருதி இல்லம்துறந்தான் சிறந்தவன் என்று குறித்தார்

மேலும் அதைத்தொடர்ந்தே அவர், அவனிற் சதகோடி உள்ளத் துறவுடையான் என்றும் கூறினார், அவ்வாறு இல்லந்துறந்தவனை விடச் சிறந்தவன் உள்ளத்துறவுடையான்,

எனவே துறவு இல்லத்துறவு உள்ளத் துறவு என இருவகைப்படும்.

இவ்விரண்டில் இல்லத்துறவே மேலானது. மக்கட்குப் பயன்படுவதால்.

இக்கூறிய இல்லத்துறவிகளையே நம் தமிழ் முன்னோர் அந்தணர் என்றார் என்று கடைப்பிடிக்க. அந்தணர் என்ற சொல் அயலவர் மாசு படாத செந்தமிழ்ச் செல்வம்!

## மனம்

மனசு என்ற வடசொல்லின் சிதைவென்பார் வந்தவரும், சில கந்தல்களும்.

மன்னுவது மனம்என்பதைத் தமிழ்மக்கள் அறிந்து ஏமாறாதிருக்க வேண்டும்.

உலகுக்கு முதன்முதலில் தத்துவநூல் (கபிலர் எண்ணூல்) தந்தவர்கள் தமிழர்கள் அதில் மனம் என்பதின் இலக்கணத்தைத் தெளிவுறுத்தியதை மன்னுவது என்ற காரணத்தால் மனம் என்று அதற்குப்பெயர் அமைத்தமையே காட்டும். மனமானது புலன்வழிச் செல்லாமல் தன்னிலையில் மன்னுவதே உணர்வு நிலை என்றும் அந்த உணர்வு நிலையே விடுதலை· வீடு என்றும் கூறும் கபிலர் எண்ணூல்,

தூய தமிழ்ச்சொல்லாகிய, மனம் என்பதை வந்தவர் எடுத்துக்கொண்டனர் வேறு வழியில்லாததால் என அறிந்து வைக்க,

## பிணம்

பிண் என்ற வேர்ச்சொல் நீக்கம் என்ற பொருளுடையது. உயிர் நீங்கிய உடலைக் குறிப்பது எனக்கொள்க. அதில் அம் இறுதிநிலை எனவே பிணம் தமிழ்ச் சொல்லே.

○


**விற்பனையாளர்**

**இல்லாத இடங்களில்...**

குயில் இதழைப் பெற
விரும்புவோர்
உறுப்பினராகச் சேர்ந்துகொள்க.
விற்பனைசெய்ய விரும்புவோர்
எழுதுக.

# குல்லாய் போட்டான் தில்லிக்காரன்!

கல்வி கற்றவரே — மிகுந்த
செல்வம் பெற்றவரே — உமக்
கெல்லா மிருந் தென்னபயன்?
குல்லாய் போட்டான் தில்லிக்காரன்

சமையத் தலைவரே — நல்ல
தமிழப் புலவரே — ஊர்க்
குமுக்குச் சொல்லித் தமுக்கடிப்பீர்
அமுக்கிப் போட்டான் தில்லிக்காரன்

குமுக்கு—ஆதரவு.

ஆலைக் காரரே — பெரிய
வேலைக் காரரே — நீங்கள்
மேலிருக்கும் சோலி பெற்றீர்
வாலறுத்தான் தில்லிக்காரன்

அலுவல் காரரே — பண
வலிவு காரரே — நீங்கள்
மலிய உண்டு சலுகைஎன்றீர்
தலைக விழ்த்தான் தில்லிக்காரன்

ஆள வந்தோரே — கை
நீள வந்தோரே — நீங்கள்
தூளாக்குவோம் பகையை என்றீர்
ஆளாக் கினன் தில்லிக்காரன்

நிலம் படைத்தோரே — உடல்
நலம் படைத்தோரே — நல்ல
குலம்பு டைக்க வாழுமுங்கள்
எலும்பு டைத்தான் தில்லிக்காரன்

குலம் புடைக்க — இனம் மேன்மைபெற.

ஊர்ப்படி யாரே — நல்ல
தீர்ப்புடை யாரே — உங்கள்
மேற்ப டிக்கும் வீம்படிக்கும்
ஆப்படித்தான் தில்லிக்காரன்

ஊர்ப்படியார்—ஊராரின் பிரதிநிதி.

உடைமைக் காரரே — மக்கள்
கடமைக் காரரே
படைமலிந்த குடிகள் என்பீர்
அடிமை என்றான் தில்லிக்காரன்!

## தொண்டு!

இலங்கையில் தமிழை நியாயமான அளவு உபயோகிக்க வசதி செய்யும் மசோதா ஒன்று அடுத்த 7-ஆம் தேதி சட்டசபையின் ஆய்வுக்கு வர இருக்கிறதாம்.

இலங்கை புத்த குருக்களின் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சிலர் இம்மசோதாவின் சிலபிரிவுகளைக் கண்டிக்கிறார்களாம்

புத்த குருக்கள் கட்சியின் மத்தியக்குழு அண்மையில் கூடி இரு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறதாம்

நெருக்கடி நிலைமையில் இம்மசோதாவை நிறைவேற்றச் செய்யும் முயற்சியைக் கண்டிக்கிறதாம் ஒன்று

சட்டசபையில் மசோதாவைக் கொண்டுவருமுன் அதன் பிரதியைக் கட்சிக்கு அனுப்பாததைக் கண்டிக்கிறதாம் மற்றொன்று.

★

## நல்வழி!

அரபு நாடுகளில் ஏற்பட்ட பயங்கரக் குழப்பத்தின் காரணமாக எந்த நேரத்திலும் உலகப் போர் மூளலாம் என அஞ்சிக் கிடந்த நிலைமாற ஒரு நல்வழி ஏற்பட்டிருக்கிறது.

உலகத்தலைவர்கள் மாநாடு இத்திங்கள் இரண்டாவது வாரத்தில் நடைபெறவிருக்கிறதாம்.

இந்தியப் பிரதமர் நேருவும் இதில் கலந்து கொள்ளப் போகிறார்.

## வீரர்கள்...

காங்கிரஸ் ஆனாலும் கம்யூனிஸ்ட் ஆனாலும் ஆட்சிக்கு வந்ததும் துப்பாக்கியின் துணையை நம்பியே வாழவேண்டியிருக்கிறது. அண்மையில் சென்னை துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போது நடந்த துப்பாக்கிச்சூடும், கேரளாவில் நடத்தப்பட்ட கூத்தும் அடக்கு முறையை நம்பியே ஆள வந்தார்கள் வாழ்கிறார்கள் என்பதை மக்களுக்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றன.

மக்கள் வாழ்வுக்குப் பாதுகாப்பின்றித் தவிக்க வேண்டிய நிலைக்கே உலகம் சென்று கொண்டிருப்பதை அன்றாட நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

தன்னம்பிக்கையும், கொள்கையுறுதியும், பிறர்நலம் பேணும் பெரும் மனப்பான்மையும், பொதுப்பணிக்கே வாழும் பண்பும் ஆகிய அனைத்தையும் இழந்து "யாரால் ஆளவந்தோம்" என்றும் எண்ணிப்பாராமல் திட்டிய மரத்தில் பாயும் வேலாகி மக்களைக் கொக்கென்றும் குருவியென்றும் நினைத்துச் சுட்டுத்தள்ளிவிடத் துணிகிறார்கள் ஆளவந்தவர்கள்.

கொள்கையின் கோணலும் கட்சியின் காட்சியுமே அவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கி விடுகின்றன.

இது எத்தனை நாள் வாழ்வென்பதைச் சற்றேனும் எண்ணாமல் ஈடுபட்டுச் செய்யும் இத்தகைய செயல்களை—அவற்றால் ஏற்படும் பலன்களைத் தனித்திருக்கும் நேரத்திலாவது சற்று நினைத்துப் பார்க்க வேண்டும் இந்த வீராதி வீரர்கள்.

எது மனிதப்பண்பு? எது மனிதப்பண்பு? என அவ்வப்போது கேட்டுக்கொண்டேயிருக்கிறது உள்ளத்தடத்தின் அடியிலிருந்து ஒரு குரல். அதற்கு எப்போதேனும்- எப்படியேனும் ஒரு நாள் விடை கூறியே ஆக வேண்டும் இத்தகைய வெறியர்கள்.

காலத்தை எதிர்நோக்கிக்காத்திருக்கும் சமுதாயம் தக்க விடைகாணும் நாள் தொலைவிலில்லை.

— ஒளி —

★ ★ ★

## பாண்டிச்சேரி

இவ்வூர் பிரசவ விடுதியில் தங்கிப் பிரசவம் பார்த்துக்கொள்ளும், ஒவ்வொரு பெண்களையும், தினசரியும் ஒரு ஆபீசர் வந்து நீங்கள் என்ன சாதி என்று கேட்டு எழுதிக்கொண்டு செல்கிறார். மறுநாளும், (தங்கியிருக்கும் நாள் வரை) எழுதிக் கொண்டு செல்கிறார்.

இதுவரையில் இந்தப்பழக்கம் இவ்வூரில் கிடையாது.

மேலும், இவ்வூரில் சாதிப் பெயர் போடக் கூடாது என்று பல வருடங்கட்கு முன்பே, பிரஞ்சுஆட்சியில் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சாதிமதமற்ற சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் ஆட்சியினர் இவ்விதம் விசாரணை செய்வது ஏனென்று புலன் ஆகவில்லை.

—புதுவை சு. சம்பந்தம்.

—○—

### திருத்தம்

*29-7-58 இல் வந்த குயிலின் மூன்றாம் பக்கத்திலுள்ள "வரப்போகும் திருநாள்" என்ற பாடலின் கடைசி நான்கடிகளைப் பின்கண்டவாறு திருத்திக் கொள்க.*

பொருளாலே, பிறப்பாலே, தாழ்ந்தோர்
இல்லை!—மூட
வழக்காலே சிறப்பாக வாழ்ந்தோர் இல்லை!
அருளாலே, அன்பாலே எவரும் ஒன்றே
[—என்ற
உணர்வாலே நிறையின்பம் பெறுவோம்
[இன்றே!

★ ★ ★

# பேறு பதினாறு!

பதினாறு பேறும் பெற்றுப் பெருவாழ்வு பெறுக என்று வாழ்த்துவது உண்டு. இதில் பதினாறும் பெற்று, என்றால் பதினாறு பிள்ளைகளைப் பெற்று என்பது பொருள் என்று நினைக்கின்றார்கள் சிலர்.

பதினாறு வகைப் பேறுகள் இன்னவை என்பதை இச்செய்யுளால் அறிக. இச்செய்யுள் காளமேகப் புலவர் பாடியுள்ள "துதி வாணி" என்று தொடங்கும் செய்யுளின் தனித் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

**கட்டளைக் கலித்துறை**

1 புகழ் 2 கல்வி 3 வீரம் 4 புனைவெற்றி
5 மக்கள் 9 பொருள் 7 துணிவே
மிகு 8 நெல் 9 மணி நலம் மேலாம்
10 நுகர்ச்சி 11 அறிவு 12 அழகே
பகுபல் 13 பெருமை 14 பழங்குடித்
தன்மை 15 பிணிகள் இன்மை
16 தகும் ஆண்டும் ஆகும் பதினாறு
பேறெனச் சாற்றுவரே.

இதில் துணிவு என்பதை வடவர் தைரியம் என்பர். நெல்மணி என்பது நெல் முதலிய மணி வகையைக்குறிக்கும். நலம் இதை வடவர் சௌபாக்கியம் என்று கூறுவர். போகம் என்று வடவர் சொல்லியுள்ளதை நுகர்ச்சி என்ற இன்றியமையாத தமிழ்ச்சொல்லாற் சொல்லுவர் நம் தமிழ்மேலோர். பகுபல் பெருமை-மேலும் மேலும் புதிது புதிதாக ஏற்பட்டுவரும் பெருமை என்க. பழங்குடித் தன்மை - தமிழ்ப் பெருங்குடிகட்கிருக்க வேண்டிய உயரிய பண்பாடுகள். தகும் ஆண்டு - வாழ்நாள் மிகுதி.

# இராமன் தெய்வம் அல்லன்

காளமேகம் தில்லைக்குச் செல்கின்றார். அவரைத் தில்லைக்கோவிந்தராசர் கோயிலிலுள்ள நம்பியார் காணுகின்றார். காளமேகப் புலவரைத் தம் இராமனைத் தெய்வமென்று கூறும்படி முயலுகின்றார். அவர் கேட்டார்:

காளமேகப் புலவரே, இராமன் கடவுள் அல்லனோ?—

அதற்குக் காளமேகப் புலவர் பாடுகின்றார்:

**சத்தாதி ஐந்தையும் தாங்காத**
**தெய்வம் தனிமறையும்**
**கர்த்தா எனுந்தெய்வம் அம்பலத்**
**தேகண்டும் கண்கள் இரு**
**பத்தானவன் மைந்தன் பொய்த்தேவி**
**யைக்கொல்லப் பார்த்தழுத**
**பித்தான வன்தனை யோதெய்வ**
**மாகப் பிதற்றுவதே!**

இதன் பொருள்:

பிறப்பு இறப்பில்லாத தெய்வமானவனும், ஒப்பில்லாத நான் மறையும் தலைவன் என்று புகழும் தெய்வமானவனும், ஆகிய கூத்தனை அம்பலத்தில் கண்டும், கண்கள் இருபதுடைய இராவணன் மகனான இந்திரசித்தன், பொய்யாகிய சீதையைக் கொல்வதைக் கண்டு அழுத பித்துடையவனைத் தெய்வமென்று பிதற்றுவது கூடாது? என்பதாம்

பொய்ச் சீதை என்பதையும் அறியாத ஒருவனைக் கடவுள் என்று சொல்ல முடியாது என்பது கருத்து.

## நன்றி!

நமது திண்டுக்கல் விற்பனையாளர்
**திரு. த. தசரதன் அவர்கள்**
நாம் கேட்டிருந்தபடி **"கற்கண்டு"** என்ற
நூலை அனுப்பிவைத்துள்ளார்.
அவருக்கு நம் நன்றி!

—*அமைச்சர்.*

# பிசிராந்தையார்

## தொடர் நாடகம்

### காட்சி ச.

இடம் : பாண்டி நாட்டுத் தெரு.

நேரம் : நடுப்பகல்.

உறுப்பினர்: பறை முழக்குவோன், பாண்டியன், பாண்டிமன்னி, பிசிராந்தையார், அமைச்சன், தச்சுப்புலவர்.

காட்சித் தலைப்பு:

### கொலைசெய்தார் யார்?

நிகழ்ச்சி : *யானைமேல் பறையறைவோன் அமர்ந்திருக்க — யானை ஒரு தெருவின் நடுவில் வந்து நிற்கின்றது. கூட்டமக்கள் கேட்க நிற்கின்றனர். பறை முழக்கப்படுகின்றது.*

பறை முழக்குவோன் : குட்டையில் பெட்டி ஒன்று கிடைத்தது. பெட்டியில் பெண் உடல் ஒன்றுகாணப்பட்டது. இறந்த அப்பெண்ணின் உடலில் நிறைந்த புண்கள் காணப்படுகின்றன. அந்தப் பெண்ணும், ஏறத்தாழ ஏழு திங்கள் குழந்தையை ஈனுதவயிறுடையாள். நெற்றியிற் குங்குமம் நிறைந்திருக்கின்றது கற்றைக் குழலில் கமழ்கின்றது மலர்! இருக்கும் உடலம் எரிக்கப்படுமுன் வந்துகாண்க கானு மாளிகையில்! உறவினர் கேட்டால் உடல் தரப்படும். கொலைபுரிந்த கொடியவன் யாவன் என்பதை அறிந்தவர் இயம்பவேண்டும். பாண்டியன் அறிவுடை நம்பி கட்டளை.

(போதல்)

கேட்டவன் க - எல்லாரும் நல்லவர். எல்லாரும் செல்வர்! இந்தப் படுகொலை எப்படி நேர்ந்தது? ஐயோ!

கேட்டவன் உ. - பாண்டிய நாட்டிலும் படுகொலையா?

கேட்டவன் ரு. - அறிவுடை நம்பி ஆட்சியின் வீழ்ச்சி இது!

கேட்டவள் ச. - பிசிராந்தையார் நாட்டிலும் பெண் கொலை நேர்ந்ததா?

கேட்டவள் ரு. - நிறைந்த குங்கும நெற்றியாமே, தலையில் நிறைமலர் மணமாமே, குத்தப்பட்டுச் செத்தாளாமே! வெட்டப்பட்டு வீழ்ந்தாளாமே!

கேட்டவள் சு. - மணந்தவன் எங்கே வருந்துகின்றானோ! துணைவன் எங்கே துடிக்கின்றானோ?

கேட்டவள் எ.- அலைந்துகொண்டிருப்பான் அவள் ஆம்படையான்; தொலைந்ததைக் கேட்டால் துடித்துப்போவான்!

### ஒருபுறம்

*பறை முழக்குவோன் பகர்ந்தது கேட்ட கருத்தாங்கிய ஒருத்தி தன் வீட்டுக் குறட்டில் வெலவெலத்து வீழ்கின்றாள். அவள் உடல் நடுங்குகின்றது. நிறையாக் கருவும் நெகிழ்கின்றது. தாய்மார் பலர் திரை பிடிக்கின்றனர் மங்கைமார் பலர் வாரித்தூக்குகின்றனர்.*

கருவுடையாள் : குத்தக் கத்திஎடுத்து வருகின்றான் யாரோ ஒருவன்! வெட்டக் கத்தி எடுத்து வருகின்றான் யாரோ ஒருவன்!

தாய் ஒருத்தி : ஒன்றுமில்லையம்மா! ஒன்றுமில்லையம்மா!

(வீழ்ந்தவள் வீட்டினுள் தூக்கிச்செல்லப் படுகின்றாள்.)

### அரண்மனையில் ஒருபுறம்

பாண்டியன்- (*அமைச்சனை நோக்கி*)

அறமே புரிந்தனர் அனைவரும் என்றாய்
பாவம் புரிபவர் இலைஎனப் பகர்ந்தாய்
பொய்யுரைப்பவர் பொல்லாங் கிழைப்பவர்
இந்த நாட்டில் இல்லை என்றே

அடிக்கடி என்னிடம் அறிவித் தாயே
படுக்கிடத் தக்க படுகொலைச் செய்தி
உலகங் கேட்டால் கான்றுமி ழாதா!
அழகாய் இருந்ததே அமைச்சர் கண்காணிப்பு!
ஏசலும் பூசலும் இருந்த உலகுக்கே
ஆசாரம் கற்பித்த இந்த அரண்மனை
பிள்ளைத் தாய்ச்சியின் பிணத்தையும் காண்பதா?

*(ஊர்க்காவலர், பொது மருத்துவர், ஒற்றர் பலர் வருகின்றனர் அரசன் அவர் பக்கம் திரும்புகின்றான்.)*

அரசன்:

கண்டது கண்டவாறு கழற வேண்டும்
பொய்உரைக் காதீர் பொய்யுரைக் காதீர்
என்னசொல் கின்றனர் என்நாட்டு மக்கள்?
அன்னை மார்கள் அலரு கின்றாரா?
என்றன் ஆட்சியை இகழ வில்லையா?
பண்பிலாப் பாண்டியன் பாழாய்ப் போகென
மண்ணை வாரி இறைக்கின் றாரா?
ஒன்றை யேனும் ஒளித்தால் என்னைத்
தின்றவர் ஆவீர் செப்புவீர் நிலைமையை!

*(இருந்தவர் அனைவரும் இரு காதுகளை யும் பொத்திக்கொள்ளுகிறார்கள்.)*

ஊர்க்காவலன்–

புலவர்கள் நெஞ்சம் புழுங்கு கின்றனர்
நாவலர் அனைவரும் நடுங்கு கின்றனர்
பாவாணர் கேட்டுப் பதறு கின்றனர்
அறிவுடை நம்பியார் ஆட்சி தன்னிலா
இந்தப் படுகொலை என்று கூவினர்
பிசிராந்தை யாரின் பெரும்பாண்டி நாட்டிலும்
கசியும் செந்நீர்க் கரைப டிந்ததா?
என்று மிகமிக இழித்துரைத் தார்கள்
பேய்க்கனவு கண்ட தைப்போல் பிள்ளைகள்
தாய்க்கு மனம்நோவத் தாவினர் நடுங்கி!
அஞ்சத் தக்க செய்தியால் அனைவரும்
நெஞ்சு வெடிக்க நிலைக லங்கினர்
கருத்தாங்கி யிருந்த கன்னித் தாய்மார்
கருச்சிதை வுற்றுக் கலங்கு கின்றனர்
அறத்தின் வேரே ஆடி விட்டது.

பொது மருத்துவன்:

துன்பம் பற்றிய சொல்லையும் தாங்காத
மென்மை யான உள்ளம் மிகவும்
கடுஞ்செய்தி தாங்குதல் கடினம் ஐயனே
களவும் கொலையும் கண்டறி யாதவர்
கேடும் கெடுப்பும் கேட்டறி யாதவர்
அப்படி அறம்எனும் சிறையில் அடைபட்டு
மனக்கோட் டம்எனும் வகையறி யாதவர்
கருவைத் தாங்கிய கட்டிக் கரும்பு
படுகொலை செய்யப் பட்டது கேட்டு
விழுந்தார் எழுந்தார் என்பது வியப்பா
சாகா திருப்பது தந்தையே வியப்பு!

அரசன்:

நல்லவர் நிறைந்த நாட்டி லேஒரு
பொல்லா தவனும் இருந்தா னன்றோ.

அமைச்சன்:

இக்கொலை புரிந்தவன் இந்நாட் டானோ
எந்நாட் டானோ யாருக்குத் தெரியும்!

அரசன்– ஆம்! ஆம்! எந்தப் புலனும் கிடைக்கவில்லை. கொலை செய்தவன் எவன் ஏன் கொலை செய்தான் என்பதை எல்லாம் அறியவேண்டும் அமைச்சரே! விரைவில் அறியவேண்டும்.

*(தலை தாழ்கின்றது உடல் ஒடிகின்றது.)*

நான் உயிர் வாழவேண்டுமானால், விரைவில் தகவல் அறிவிக்கவேண்டும்.

*(இருக்கையில் சாய்தல். மற்ற அனைவரும் அரசர்க்கு உதவி செய்கிறார்கள். விசிறியும், முகத்து நீர் தெளித்தும்.)*

அமைச்சன்: அரசர் அறியவேண்டும். என்சூள் உரை: மூன்று நாட்களில் கொலைபற்றிய உண்மைகளைக் கண்டறிந்து கூறுவேன். முடியாவிட்டால் செத்து மடிவேன்.

அரசன்: *(விழி திறந்து)* அப்படியா! நன்று.

**அரண்மனையில் மற்றொருபுறம்**

*(பெண்ணுடல் விசிப்பலகையில் கிடத்தப் பட்டிருக்க, அரசியும் மற்றப் பெண்டிரும் சூழ்ந்திருக்கிறார்கள்.)*

அரசி: (துன்பக் கண்ணீருடன்)
பாண்டிய நாட்டுப் பச்சைக் கிளியே
தூண்டா விளக்குத் துண்ணென அவிந்ததா?
எவன்செய்த படுகொலை? ஏன்செய்தான் கெடு
[தலை?
தவம்செய்து பெற்றஉன் தாய் யார் தந்தையார்
எவன்பெண்ணே நீதரும் இன்பம் இழந்தவன்?

*(பிசிராந்தையார் வருகின்றார்.)*

தாங்கமுடிய வில்லையே சாவின் காட்சி!

பிசிரா: சிலந்திவலை மலையையா தாங்கும்! செவ்விய உள்ளம் தீச்செயல் தாங்குமா? அரசியாரே. அம்மைமாரே! விரைவில் நீங்கள் இவ்விடத்தை விட்டு விலகவேண்டும். மாண்ட உடலை மருத்துவர் ஆராயவேண்டும்.

அரசி:
உறவின் முறையார் ஒருத்தரும் இல்லையே
நாங்களும் பிரிவது நன்றோ ஐயா?

பிசிரா: (உரத்த குரலில்)
தாங்காத துன்பத்தால் சாக விருப்பமா?
நீங்கி இருந்து நிலைக்க விருப்பமா?

*(அனைவரும் ஒருபுறம் போக-மருத்துவப் பெண்டிர் வருகின்றார்கள். பிணத்தின் நிலை ஆராய்கின்றார்கள்.)*

மருத்துவச்சி: உடல் அழுகி விட்டது. இன்னும் வைத்திருப்பது கூடாது. மேலும் வயிற்றுக்குள் இருந்த குழந்தையும் செத்து விட்டது. அதையும் எடுக்கவேண்டும்.

பிசிரா: தச்சுப் புலவரைக் கொண்டு இப் பிணம்போல் அச்செடுக்கச் செய்யவேண்டும். வேலையைப் பாருங்கள்.

*(பிசிராந்தையார் போதல்.)*

ஒருபுறம்

*தச்சுப் புலவன் ஒருவனுக்குப் பிசிராந்தையார் கட்டளை யிடுகின்றார்:*

பிசிரா: தச்சுப்புலவரே, இவ்வுடல் எரிக்கப் படவேண்டும். ஆயினும், பிணத்திற்கு உடையவரையும், கொலை செய்தவரையும் கண்டு பிடிக்க அப் பிணமும் தேவைப்படுகின்றது. ஆதலின், பிணம் இருக்கும் நிலையில், பாவைப் பிணம் ஒன்றுதேவைப் படுகின்து!

தச்சன்— நன்று ஐயா!

(போதல்.)

# ஆரஞ்சுப்பழம்.

*வித்துவான், வை. மாணிக்கசாமி.*

ஆரஞ்சுப் பழத்தைக் கந்தன்
ஆவலாய்க் கடித்தான்; வேம்பின்
ஓரிலை மென்றான் போல
ஒளிமுகம் சுளித்துச் சொல்வான்:
"ஆரஞ்சை இனிய தென்பார்க்
கறிவினில் கோணல் போலும்!
காரமாய்க் கசக்கும் கெட்ட
கனியிதென்" றெறிந்து விட்டான்.

கந்தனின் செய்கை எல்லாம்
கண்டுநின் றிருந்த தந்தை
மைந்தனுக் குண்மை காட்ட
மண்ணின்மேல் எறியப் பட்ட
அந்தநற் கனியின் தோலை
அகற்றியே; சுளைகள் ஆக்கித்
தந்தனர்; மைந்தன் நாக்கைத்
தட்டியே சுவைத்துத் தின்றான்

"தோலினை முயன்று நீக்கிச்
சுளைகளில் சுவையைக் கண்டாய்,
ஞாலவாழ் வதிலும் இன்பம்
நன்குநீ உழைத்தால் உண்டாம்.
பாலநின் பருவம் தன்னில்
பள்ளியில் உழைத்தால் எந்தக்
காலமும் கொள்ளை இன்பம்
காணுவாய்" என்றார் தந்தை!

(பிரஞ்சுப் பாடலொன்றின் தழுவல்.)

# தலைவற் கீந்தாள்

துறை: நெய்தல் ஆ. அ.

அலையைக் கரையில் மோதவிட்டே
யார்ப்ப ரிக்குங் கடல்மேலே
வலையைப் படகில் எடுத்தேகி
வாழ்வை வகுக்கும் வளந்தேடி
விலையைக் காணு அன்போடே
விரைந்தோன் களிப்பில் மிதந்திட ம
தலையை இடையில் இருந்தெடுத்துத்
தலைவற் கீந்தாள் தாழ்குழலே! ★

# ஏன் பிறந்தேன்!

( ப. சு. வே )

துனிவுற்றுத் துடிதுடித்து வாடு கின்றார்
    துயரதனை எடுத்துரைக்கச் சொற்கள் போதா!
பிணியுற்றுப் பீடிழந்து வீடி ழந்து
    புளித்தகஞ்சி பொத்தலுடை யாது மின்றி
நனியுற்ற வறுமையதால் நெஞ்சம் மாழ்கி
    நடமாடும் பிணமாகத் திரிவோர்க் கண்டு
கனிவுற்று வாடுகின்றேன்! கவலை போக்க
    வழியற்றேன்! மனிதனென ஏன்பி றந்தேன்!

'ஏன்பிறந்தோம்' என்றுதினம் எண்ணி எண்ணி
    இதயமெலாஞ் சுழல்கின்றார்! வேறென் செய்வார்!
கூன்பிறந்த நெஞ்சுடையார் கொடுமை யாலே
    குமுறுகின்ற நெஞ்சொலிக்குச் செவிடர் ஆகித்
தேன்பிறந்த சொல்லாலே முழங்கு கின்றார்!
    'திருநாட்டீர் எல்லோருஞ் சமமே' என்று
கான்பிறந்த விலங்கினத்திற் கீழா யுள்ள
    கதிமாற்றத் திறனற்றேன்! ஏன்பி றந்தேன்!

செல்வர்க்கோர் சிறுதிங்கு முளைக்கு மாயின்
    சீருடையார் ஏமாற்றம் கனவில் காணில்
வல்லோரின் நாவசைய வரிந்து கட்டி
    வளஞ்சேர்க்க ஆட்சியெழும்! நாடே பேசப்
பல்லோரின் பார்வையவர் பக்கம் ஓடிப்
    பரிந்துரைக்கும்! படருகின்ற அல்ல லோடு
மல்லாடும் ஏழையெனில் மனமி ரங்கார்
    இடித்துரைப்பார்! இதைக்காண ஏன்பி றந்தேன்!

புல்லியவாம் நெஞ்சுடையார் ஆட்சி தன்னில்
    புகுந்தாடும் நெறிமுறைகள் அனைத்து மிங்கே
இல்லோர்க்கு நஞ்சாகும்! ஏனை யோர்க்குப்
    பணிபுரிந்தே அடங்கியவர் பாதம் ஏந்தும்!
அல்லற்பட் டாற்றாமல் அழுத கண்ணீர்
    செல்வத்தைத் தேய்க்குமெனப் புலவன் சொன்னான்
பொல்லாத இவ்வுலகில் புழுதி மேட்டை
    நனைக்குங்கண் ணீர்காண ஏன்பி றந்தேன்!

மண்ணுலகில் மனிதனெனப் பிறந்தேன் ஆனால்
    மருவுகின்ற துயர்போக்க இயலா தின்னல்
புண்ணுலகில் சிறுபுழுவாய் நெளிந்து வாடிப்
    போக்கற்றார் தமைக்கண்டு புழுங்கு கின்றேன்!
கண்ணுலகம் கருத்துலகம் அழிந்த தேயோ!
    கருணையுடன் நல்லன்பும் ஒழிந்த தேயோ!
பண்ணுலகம் ஏறிநின்று பதைப தைத்தேன்!
    பயனற்றேன்! பாரமென ஏன்பி றந்தேன்!

★★
★

வெளிவராத விளம்பரம்: 1.

## குத்துச் சண்டை

—

நிகழிடம்: கேரளம்

பங்கு:

கம்யூனிஸ்ட் × பிற கட்சிகள்
(முக்கியமாகக் காங்கிரஸ்)

காலம்: கடந்த சில காலம்.

நடைபெற்றவை:

போலீஸ் அடக்குமுறை, தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம், முந்திரித் தொழிலாளரிடைத் துப்பாக்கிச் சூடு, கம்யூனிச ஆட்சியின் அடக்கு முறைகளைக் கண்டித்த அடையாள வேலை நிறுத்தம், 350 பேருக்கு மேல் மாணவர்கள் கைது, இன்ன பிற......

விதிகள் } கிடையாது.
கட்டணம் }

நடக்க இருப்பவை:

எதிர்பாருங்கள்!

குறிப்பு:

தலைவர்கள் விருப்பம்போல் நிகழ்ச்சிகள் மாற்றப்படும்.

★★
★

## அனைத்தும் வெறுத்தாள்

புதுவை, இ. பட்டாபிராமன்.

"பண்பாடித் திரிகின்ற குயிலே! நல்ல
பண்பாளர் என்கணவ ரிருந்த காலை
அன்போடு நெடுநேரம் எம்மை இன்பில்
ஆழ்த்திடவே பண்ணிசைத்தாய்! யாமும் நிற்கு
நன்றிபல சாற்றியுளோம் ஆனா லின்று
நானிலத்தைத் துறந்திட்ட நலஞ்சேர் அன்னார்
இன்றிநான் உன்னிசையை எங்ஙன் கேட்பேன்?
என்னுள்ளம் வருத்தாதே! பறந்து போவாய்!

மணங்கமழச் செய்முல்லைக் கொடியே! என்றன்
மனங்கவர்ந்த கொழுநருயிர் வாழ்ந்த நேரம்
இணையாக யாமுந்தன் அருகே வந்தால்
ஈடில்கின் மலர்மணத்தை வீச யாங்கள்
மனமகிழ்வு நனிகொண்டோம் அந்தோ! இன்று
மறத்தமிழர் அருட்சிகரம் இல்லை; நீதான்
கணப்போதும் ஓய்வின்றி மணம்வீ சாதே!
கண்ணாளர் மறைந்தபின்னர் மணமா தேவை?

இன்பத்தை ஈகின்ற தென்றல் காற்றே!
என்னன்பர் உலகத்தே ஒளிர்ந்த காலை
அன்புடனே எமைத்தழுவிச் சென்றா யின்றோ
அவரில்லை; எனைமட்டும் தழுவல் வேண்டாம்
மண்ணகத்தார் போற்றுகின்றார் உன்னை, ஆனால்
மணாளனிலா யான்போற்றேன் விரைந்துசெல்வாய்
மண்மூடிப் போயிற்றே என்றன் வாழ்வு
மரணத்தில் தான்இன்பம் எல்லாம் தோன்றும்

தண்ணிலவை வீசுமுழு மதியே! என்றன்
தளிர்க்கரத்தைத் தொட்டதினா லின்பங் கொண்ட
பண்புமிக்கார் தம்மோடு யானும் சேர்ந்து
பரவசமே கொண்டேனால் உன்னைக் கண்டு
திண்டோளர் இன்றில்லை எனைப்பி ரிந்தார்
தீராத துன்பத்தால் உடல்மெ லிந்தேன்
உன்னொளியோ வெப்பத்தை உமிழ்வதைப்போல்
உணர்கின்றேன் உடனேநீ மறைந்து போவாய்!

அன்பொடுநற் பண்புமில்லாக் காமு கர்கள்
அதிகவெறி கொண்டென்னைச் சுற்றுகின்றார்
இன்பினரை இழந்திட்ட தாலே வேலி
இல்லாத பயிரானேன் ஐயோ உள்ளம்
புண்பட்டுத் தவிக்கின்றேன் பூமி தன்னில்
பூரிப்போ இனிஎன்றும் இல்லை; உண்மை!
தண்ணிலவை இழந்திட்ட மதியா னேன்காண்
தன்மானத்துடன் வாழ வழியே இல்லை"

(வேறு)

இன்பமுடன் அந்த இளம்பெண்நஞ் சுண்டிறந்தாள்
பண்பில்லாப் பாரை வெறுத்து. ★

## காதல் நெஞ்சம்

மதுரை. ரஹமான்

சற்றும் அமைதியி லாதஎன் வீட்டினைச்
சத்திர மாகவே வைத்திருந்தேன்
முற்றும் அறிமுகம் அற்றவர் பற்பலர்
மொய்த்துவந் துள்ளே வசிக்கலுற்றார்.

தீயவர் பல்லோர் நுழைந்திடு வார்மிகத்
தேம்பி அழுது துடித்திடுவேன்;
தூயவர் சில்லோர் வருவதுண் டுகளி
துள்ளிச் சிரித்து மகிழ்ந்திடுவேன்.

கீதம் ஒலிக்காத வீணையைப் போல்வீடு
கேடுற்ற தன்மையில் வாடியதே
ஏதோ குறையினைக் கண்டுநின் றேன்அங்கே
யார்வர வுக்கோநான் காத்துநின்றேன்.

புத்துயிர் ஊட்டும் வசந்தத்தைப்போல் உயிர்ப்
பொற்சிலை யே!வீட்டில் நீபுகுந்தாய்
இத்தனை நாளாகக் கண்டறி யாதவை
அத்தனை யும்உடன் கொண்டுவந்தாய்.

மோன நிலையின் மகிழ்ச்சியை யும்மயல்
மூளும் வனப்பையும் செய்துநின்றாய்
கான இனிமையைப் பேரொளி யைமழைக்
கால முகிலெனப் பெய்துநின்றாய்.

சத்திரம் தன்னையே மாற்றிநீ மட்டுமே
தங்கிடும் மாளிகை யாய்ச்சமைத்தேன்— [உன்
முத்திரை பெற்றிட்ட பின்னும் அதற்கொரு
மூப்பும் முடிவும் வருவதுண்டோ?

—★ ▭ ★—

## காங்கிரசு

குத்தகைகள் நற்சலுகை கொள்ளாதார் காங்கிரசில்
எத்தனை பேர்கள் இருப்பார்கள்?—எத்தர்களும்
கத்தர்களும் வாழ்கின்ற காங்கிரசு வாழ்வதென்றால்
பெத்த பெருமாள் செயல்.

*கத்தர்=பொய்யர் கத்து=பொய்*
*பெத்த=பெரிய*

—○—

# உணவு

—: சித்தன் :—

நல்லுணவே வாழ்வதற்கு வேண்டும்; இன்றேல்,
நடைப்பிணமாய் நாள்கழிப்போம்; வளர்ச்சி கெட்டுப்
பல்லுயிரின் இடையினிலோர் உயிரா யன்றிப்
பார்புகழும் வலியினராய் வாழ மாட்டோம்!
செல்லுயிரைத் தாங்குதற்கே உணவென் றூரால்
சிறுமதியர்; உண்பதற்கும் வாழ வேண்டும்!
நல்லுயிரால் பயனுண்டே உலகுக் கெல்லாம்,
நாமிதனை யுணராமல் நலிந்தோம் கண்டீர்!

உயிர்ச்சத்தில் ஒன்றுகுறைந் ததனால் சீறி,
உலகறியப் புரட்சிசெய்தார் மேலை நாட்டார்!
பயிர்விளைவுப் பால்விளைவுப் பஞ்சம் இல்லை;
பண்விளைவோ ஓரிடத்தில்; அதனா லிங்கே
துயர்விளைவே அறுவடைசெய் துழலு கின்றோம்;
தோற்றத்தில் விளைவின்றிச் சிறிய ரானோம்!
உயிர்ச்சத்து நிறைஉணவால் மனித ராவோம்;
உமியாகப் பிறர்எண்ணார்; இழிவும் போகும்!

வடித்தெடுத்த சோற்றைவிட வைக்கோல் நன்றாம்;
வாய்த்தமிள காயில்மிகு வலிமை இல்லை;
அடிப்படுத்தும் புதுப்புளியால் அறிவு போகும்;
ஆண்மைகெடும்; நரைதிரையாம்; உடல மூதும்;
பொடித்தநறுங் காப்பியினால் விரைவில் மூப்பாம்;
போம்பசியும்; பித்தமிகும்; நரம்பு சோர்வாம்;
பிடித்த,பலா முக்கனியுள் பிணியின் வித்தாம்;
பேசினொரு மாங்காயோ பெரும்பே யொக்கும்!

உடல்வளர்க்கும் பொருள்:இறைச்சி, பால்,மீன் முட்டை,
உயர்பருப்புக் கோதுமையோ டரிசி யாகும்;
அடலொடு,நல் லாற்றல்தருங் கொழுப்புண் டாக்கும்;
அருங்கூல வகை,எண்ணெய், கிழங்கு, நாவிற்
படஇனிக்கும் சருக்கரை,பா லேடென் பார்கள்!
பயன்தந்தே உடல்காக்கும்: வெண்ணெய், காய்கள்,
திடஞ்செய்மோர், கீரைவகை, ஈரல், மூளை,
செழுங்கனிகள்! தேர்ந்துண்போம்; திண்மை
கொள்வோம்!

# தலை வலிக்கிறது

கேரளாவில் எதிர்க்கட்சி அரசு நடைபெறுகின்றதென்பதைக் காங்கிரசை எதிர்க்கும் பிற கட்சிகள் வரவேற்றன.

அங்குள்ள கம்யூனிச ஆட்சிக்குத் தலைவலிகண்டிருக்கிறதுஇப்போது

ஒரு காங்கிரசுக்காரர் "கம்யூனிச சர்க்காரின் முடிவு காலம் ஆரம்பமாகிவிட்டது" என விமரிசனம் செய்திருக்கிறார்.

முந்திரித் தொழிலாளரிடையே நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டை எதிர்த்து 30 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கோவையில் அடையாள வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

கேரள முதன் மந்திரி அங்கு நடைபெறும் நேர்மையற்ற செயல்கள் காங்கிரஸ் ஆதரவாளர்களாலேயே நடைபெறுகின்றன என்று புகார் செய்துள்ளார்.

அதற்குள்ளாகக் கம்யூனிஸ்ட் தலைவர் டாங்கே, "கேரளாவில் மீண்டும் துப்பாக்கிச்சூடு நடைபெறுவதைத் தடுக்க அங்குள்ள கம்யூனிஸ்ட் அரசாங்கம் தவறுமானால் இந்தியக் கம்யூனிஸ் கட்சி அதற்கு பதவி விலக்கக் கட்டளையிடும்" என்றும் கூறியிருக்கிறார்.

நாளை நடப்பதை யாரறிவார்?

நாடகமே உலகம்...?

# விடுதலை பெறுவோம் வாரீர்!

**திருச்சி, இளங்கீரன்.**

சுதந்திரமாக வாழவேண்டும் என்பதை மனிதன் மட்டும் விரும்புவது கிடையாது. உலகில் உள்ள எல்லா உயிர்களுமே சுதந்திரத்தை விரும்புகின்றன, சுதந்திரம் இல்லையென்றால் அவைகள் சுதந்திரத்தை நோக்கி ஓடுகின்றன.

ஆகாயத்துப் பறவையைப் பார்க்கிறோம் பஞ்சவர்ணக்கிளியைக் கொண்டுவந்து அதனோடு கொஞ்சிப் பேசவேண்டி, தங்கத்தால் ஓர் கூண்டு செய்து, அந்தக் கூண்டிற்கு ஏர்கண்டிஷனும் வைத்துப் பாலும் பழமும் ஈந்து. ஆண்கிளியாயின் அது கொஞ்சிப் பேசிடப் பேடையொன்றையும் இட்டு, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தாலும் அது அந்தச் சிறையில் வாழ்வதற்கு விரும்பவே விரும்பாது.

இதுபோலவே சிங்கம், புலி, கரடி முதலிய விலங்குகளை வளர்த்தாலும் அவைகள் அந்தப்பாழும் சிறையில் வாழ விரும்பா. அவைகள் எல்லாம் தன்னிச்சையாக வானவீதியிலே, வனத்திலே தன் சுற்றத்தோடு கூடி, எப்பொழுதும் சுதந்திரமாகவே வாழ்வதற்கு விரும்பும்.

குருவி ஜோசியனது கிளியும், சர்க்கஸ் விலங்குகளும் கட்டுப்பட்டுள்ளனவே என்று கேட்காதீர். இப்போது சுதந்திரத்தை விரும்பும் நாம், சுதந்திரத்தை விரும்பும் கிளியென்றால், அல்லது விலங்கு என்றால், சுந்திரத்தை வேண்டாமென்று கூறும் மனிதர்களைக் குருவிஜோசியனது கிளி என்றோ, சர்க்கஸ் விலங்கு என்றோ பாவித்துக் கொள்ளுங்களேன்.

விலங்குகள் விரும்பும் சுதந்திரத்திற்கும் மனிதன் விரும்பும் சுதந்திரத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. மனிதன் சுதந்திரம் பெற்று விலங்குகளைப்போல் வாழமுடியாது. இன்று மனிதன் சுதந்திரம் கேட்கிறான் அல்லது விரும்புகிறான் என்று சொன்னால் அவன் கேட்பது அல்லது விரும்புவது விலங்கினைப் போன்ற சுதந்திரமன்றோ.

அப்படியானால் மனிதன் எதில் என்ன சுதந்திரம் கேட்கிறான்? எதற்காக வேண்டும் என்று கேட்கிறான்? சிந்தித்துப் பார்க்கவேண்டும் சீரிய முடிவிற்கு வரவேண்டும்.

மனிதனுக்கு மனிதன் அடிமையல்ல. உன்னை எப்படி மனிதன் என்றோ, இயற்கையின் அம்சம் என்றோ, ஆண்டவனின் சிருஷ்டி என்றோ அழைத்துக்கொள்கிறாயோ அதுபோலத் தானே நானும். உனக்கும் எனக்கும் படைப்பில் என்ன வேற்றுமை உள்ளது? இல்லையல்லவா! பின்ஏன் நான் உனக்கு அடிமையாக இருக்கவேண்டும்? ஆண்டவனின் விருப்பம் அதுதான் என்றால், ஏன் என்னை மட்டும் அந்த வீணன் இவ்வாறு படைக்க விரும்பவேண்டும்?

உண்டு, உடுத்தி, உலவி, உறங்கி மீண்டும் உண்டு, உடுத்தி, உலவி, உறங்குவதுதான் வாழ்வா? உண்பதற்கு உணவு, உடுப்பதற்கு உடை, உறங்குவதற்கு உறைவிடம், உல்லாசப் பொழுதுபோக்கிற் குரிய வசதிகள் எல்லாம் ஒருவனுக்கு இருந்துவிட்டால் அவனை மனிதன் என்று சொல்லிவிட முடியுமா? முடியாதே. அப்படியானால் உண்ண, உடுக்க, உறங்க ஒன்றுமே இல்லாதவனை என்னவென்று சொல்வது?

மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது, கண்ணில் படக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது, குளத்தில் நீர் எடுக்கக்கூடாது, என்பன போன்ற கொள்கைகள் ஏன் இந்தநாட்டில் மட்டும் இருக்க வேண்டும்? இத்தகைய நாடு எரிமலையினாலோ, பூகம்பத்தினாலோ அழிந்தால்தான் என்ன?

விடிய விடியத் தெருவில் பன்றியும் கோழியும் என்ன தின்கின்றனவென்பதைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம். அவற்றைத் தின்பவைகளுக் கெல்லாம் தீண்டாமை இல்லை. கேவலம் பச்சைப்புல்லையும், பருத்திக் கொட்டையையும் தின்னும் பசுவை மட்டும் தின்பவனுக்குத்தானா தீண்டாமை உள்ளது?

எத்தனிடம் சித்தத்தை ஒப்படைத்துவிட்டு, ஏமாளியாக வாழ்கிறோம் நாம். மண்டியிட்டு வணங்கி மன்றாடி, இறையே என்னைக் காப்பாற்று என்று இறைஞ்சுகிறோம்.

நான் இனிமேல் அடிமையாக வாழமாட்டேன் அடிமைத்தளையை அறுத்தெறிந்து விடுதலை வீரனாக வலம் வருவேன்; இல்லையேல் விடுதலை வீரனாகச் செருமுனையில் செத்து மடிவேன். இன இழிவு

## "புறப்படுவீர்"

முசிறி, ம. செல்லப்பன்.

எங்கிருந்தோ வந்திட்ட பார்ப்ப னர்தாம்
இருந்தோரை ஏமாற்றி வஞ்சித் திட்டார்

மங்காத தமிழகத்து மண்ணி னில்தான்
மறைமுகமாய்ச் சாதிகளைப் புகுத்திட் டாரே

கங்குல்போய்க் கதிரவனைக் காணு தற்கே
கண்ணியர்நம் பெரியாரின் தலைமை ஏற்றுப்

பொங்கிடுவோம் புறப்படுவீர் தமிழி னத்தீர்
பூண்டோடு சாதிகளை ஒழிப்ப தற்கே.

---

அடிமைத்தளை ஆகிய இவைகளை நீக்காமல் நாம் வாழ்ந்துதான் என்ன சுகத்தைப் பெறுவோம்.

மரணத்திற்கு அஞ்சாத மறத் தமிழர்களின் இதயத்திலே விடைகாணத் துடிக்கும் வினாக்கள் யாவை?

அன்று ஆழ்கடலில் முத்தெடுத்து, கத்தும் கடல் தாண்டி விற்கச்சென்ற தமிழன் இன்று சாக்கடையில் காலணாவிற்குக் கையைவிட்டுத் தேடுவது ஏன்?

அன்று மும்முரசு கொட்டி ஆண்ட தமிழன் இன்று மூன்று காசுக்குத் தகரத்தைத்தட்டி அழுவது ஏன்?

இந்தவினாக்களின் விடைகளிலேதான் தமிழன் கேட்கும் சுதந்திரத்தின் காரணம்இருக்கிறது. இன்றைய தமிழகத்து இளைஞர்களின் இதயத்திலே எழும்பும் இந்த வினாக்களுக்கு என்று விடைகிடைக்கும்? தமிழர்கள் என்று விடுதலை அடைவார்கள்?

சுதந்திம் என்பது கடைச்சரக்கு அன்று, சுதந்திரம் கொடுக்கவில்லையென்றோ, சுதந்திரம் வாங்கவில்லையென்றோ கூறுவது முட்டாள்தனம் ஆகும். நாம்தான் சுதந்திரத்தை வலியச் சென்று அடைதல் வேண்டும். எப்பாடு பட்டேனும் தாயக விடுதலை பெறுவோம் வாரீர்.

★ ★ ★

## இரங்காத கன்னெஞ்சமே!

திருச்சி, முதுகண்ணன்

ஏபெரிய வைதிகமென் மூடச் சமூகத்
திரங்காத கன்னெஞ்சமே!
ஏழ்மையொடு கீழ்மைநிலை நாட்டிநீ மேல்வாழ்வை.
யெண்ணுவது முண்மையன்றோ?

நாப்பெரிய வல்லவர்கள் மேடைநடு வேநின்று
நாவினிக் கப்பேசியே
நானிலத் தாய்பெற்ற மக்களன் றோநாம்
நமக்குளினி யேன்வேற்றுமை

ஆபெரிய வாழ்விங்கு கண்டனம் கண்டனம்
யாவர்க்கு மொப்பபதுவே
அடிமையிலை மடிமையிலை யென்றென்று கூறியே
ஆர்ப்பரித் திட்டதன்றி

நீபெரிய வாழ்விற் சமத்துவ மெவர்க்கேனு
நின்வீட்டிற் கண்டதுண்டோ?
நீதியுண் டோ?மற் றிரக்கமுண் டோ?நல்ல
நெஞ்சமுண் டோவுனக்கே.

★ ★ ★

## மண்ணில் யாதோ உன் உருவம்?

மதுரை, அமுதன்

கன்னல் தமிழோ உன்பேச்சு;
காமன் கணையோ கண்வீச்சு;
பொன்னின் துகளோ மேல்பூச்சு;
பூவின் மணமோ உன்மூச்சு;

மின்னல் ஒளியோ உன்மேனி;
மேவும் இன்பக் கலைவாணி!
தென்றல் நடையோ உன்னாட்டம்!
தேன்தமிழ் ஊற்றோ இசைப்பாட்டும்!

விண்ணில் மீனாய் விளைந்திட்டாய்!
விழியில் மணியாய் ஒளிர்ந்திட்டாய்!
பண்ணில் இசையாய் இழைந்திட்டாய்!
பருவ விருந்தை அளித்திட்டாய்!

எண்ணில் இல்லா துயர்பொருளே!
எங்கும் உன்னைக் கண்டிலனே!
மண்ணில் யாதோ உன்னுருவம்?
வாழ்வில் உணர்த்த வருவாயே!

—o—

## பாரதிதாசன் கவிதைப் போட்டி

புரட்சிக் கவிஞர். பாரதிதாசன் அவர்களின் குயிலில் வெளிவரும் கவிதைகளில் சிறந்த உணர்ச்சியூட்டக்கூடிய கவிதைகளைப் பண்ணுடன் பாடி ஒப்புவிக்கும் போட்டி ஒன்று நடைபெறும்

திருச்சி பாலக்கரையில் உள்ள திருமகள் விலாச அரிசி ஆலையில் 1958 செப்டம்பர் மாத இரண்டாவது வாரத்தில் கூட்டப்படும் பொதுக் கூட்ட மேடையில் இப்போட்டி நடக்கும்.

சிறந்த முறையில் பாடி வெற்றி பெறும் முதல் மூவருக்குப் பரிசாக ரூ.100 (ஒருநூறும்) நற்சான்றிதழும் வழங்கப்படும்.

கடலூர் வீரமணியும் மேலும் இருவரும் தீர்ப்பாளராக இருந்து பரிசுக்குரியோரைத் தேர்ந்தெடுப்பர்.

இப்போட்டியில் கலந்துகொள்ள விருப்பமுடைய (மாணவர்கள் உட்பட) யாவரும். தங்களைத் தயார்செய்துகொண்டு. வரும் ஆகஸ்ட் மாத முடிவுக்குள் அடியிற்காணும் இடத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

பிற விவரங்கள் அவ்வப்போது விடுதலையிலும் குயிலிலும் வெளியிடப்படும்.

பதிவு செய்துகொள்ளவேண்டிய
முகவரி:

செ. மு. அ. பாலசுப்ரமணியன்
*தலைவர், திருக்குறள் சிந்தனைக்குழு,*
திருமகள் விலாச அரிசி ஆலை.
*பாலக்கரை, திருச்சி.*

## விற்பனையாளர்க்கு...

விற்பனை விண்ணப்ப விதிகளில் கண்டுள்ளபடி தேவையான இதழ்கட்குரிய முன்பணமின்றிக் "குயில்" இதழ்கள் அனுப்பப்படமாட்டா.

கூடுதலான இதழ்கள் வேண்டுவோர் இதை நோக்கித் தேவையான இதழ்கட்குரிய முன்பணம் அனுப்புக.

விண்ணப்பத்தாள் பூர்த்தி செய்தனுப்பாமலும், அனுப்பிப் பணமனுப்பாமலும் இருப்போர்க்கு இதழ்கள் அனுப்பப்படுவதில்லை.

"குயில்" இதழ்கள் நன்ருகப் பார்வையிட்டே அனுப்பப்படுகின்றன. ஆகையால் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாகமுடியாது.

குயிலகத்துக்கு அனுப்பும் தொகையைப் பணவிடை (M. O.) மூலம் மட்டுமே அனுப்பி அதன் இரசீதையும் அனுப்பவேண்டும்.

செக்முதலாயின ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

★

## உறுப்பினராக...

| கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | 13 காசு | 16 காசு |
| ஓராண்டு | ரூ. 6—75, | ரூ. 8—50. |
| ஆறு மாதம் | ரூ. 3—37. | ரூ. 4—50. |
| வாழ்நாள் | ரூ. 100. | |

★

## விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு

முழுப்பக்கத்திற்கு ரூ. 100
அரைப்பக்கத்திற்கு ரூ. 50
கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக.

அமைச்சர்:
குயிலகம், புதுச்சேரி.

*ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்:* **பாரதிதாசன் புதுச்சேரி.**
*அச்சிடுவோர்:* **மா. தண்டபாணி,** *பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.*